**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி**

**Crl.M.P.No.33/2025**

**வழக்கு சாட்சி: 4**

| | |
|---|---|
| பெயர்: கோகிலா | தாலுக்கா: |
| தகப்பனார் பெயர் : | தொழில்: |

**2026ம் ஆண்டு மே மாதம் 13ம் நாள் புதன்கிழமை** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் சு.ராமகிருஷ்ணன் அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை (மனுதாரர் தரப்பு):-**

நான் தற்போது தேவம்பாளையத்தில் வசித்து வருகிறேன். மனுதாரர் எனக்கு மாமியார் ஆவார். கடந்த 18.03.2024ம் தேதியன்று தேவம்பாளையத்தில் எங்களது புதுவீடு சம்பந்தமாக வேலை நடந்து கொண்டிருந்தது மாலை 04.00 அளவில் பொது வண்டிதடத்தில் சத்தம் கேட்டது. வெளியே வந்து பார்த்தபோது எனது மாமியார் ராஜாகுமார் என்பவரிடம் பொது தடத்தில் மூங்கில்படல் வைத்தது சம்பந்தமாக கேட்டுக்கொண்டிருந்தார். அப்போது ராஜாகுமார் கையில் வைத்திருந்த சுத்தியை வைத்து வீட்டு ஜன்னல் கண்ணாடி மற்றும் பைப்பை உடைத்துவிட்டார். மேற்படி சேதாரம் ஆன பொருளின் மதிப்பு சுமார் ரூ.25,000/- ஆகும். ராஜ்குமார், குப்புராஜ் மற்றும் வடிவேல் ஆகியோர்கள் எனது மாமியாரின் தலைமுடியை பிடித்து இழுத்து கீழே தள்ளி விட்டார்கள், மேலும் எனது மாமியாரின் நெஞ்சில் எட்டி உதைத்தார்கள்.

2. ராஜ்குமார் எனது மாமியாரை பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டினார். நான் சத்தம்போட வீட்டில் இருந்த எனது வீட்டுக்காரரும், வீட்டு வேலைக்கு வந்த நபரும் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள். எனது மாமியாருக்கு

நெஞ்சு வலிப்பதாக கூறியதால் நாங்கள் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன். மேற்படி சம்பவம் கேள்விப்பட்டு போலீசார் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முறையாக புலன் விசாரணை செய்யாமல் வழக்கு பிழையுடையது என இறுதி அறிக்கை தாக்கல் செய்துவிட்டார்கள். எனவே மனுதாரர் தாக்கல் செய்த மனுவை அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.05.13 06:57:38 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி**

**Crl.M.P.No.33/2025**

**வழக்கு சாட்சி: 5**

| | |
|---|---|
| பெயர்: Palanisamy | தாலுக்கா: |
| தகப்பனார் பெயர் : | தொழில்: |

**2026ம் ஆண்டு மே மாதம் 13ம் நாள் புதன்கிழமை** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் சு.ராமகிருஷ்ணன் அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை (மனுதாரர் தரப்பு):-**

நான் தற்போது செம்மாண்டாம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 18.03.2024ம் தேதியன்று தேவம்பாளையத்தில் உள்ள சக்திவேல் என்பவரது வீட்டு வேலை நடந்து கொண்டிருந்தது, நான் அவரது வீட்டிற்கு வேலைக்கு சென்றிருந்தேன். மாலை வீட்டிற்கு வெளியே சத்தம் கேட்டது, அங்கு சென்றுபார்த்தபோது ராஜாகுமார் கையில் இருந்த சுத்தியால் பழைய வீட்டின் ஜன்னல் கண்ணாடியையும், பைப்பையும் உடைத்து கொண்டிருந்தார். இதை கேட்ட ராமாத்தாளை ராஜாகுமார், குப்புராஜ் மற்றும் வடிவேல் ஆகியோர்கள் கீழே தள்ளி உதைத்தார்கள். சக்திவேலும் நானும் அவர்களை தடுத்து ராமாத்தாளை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். ராஜாகுமார் என்பவர் ராமாத்தாளை பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சத்தம் போட்டார். பிறகு நான் என் வீட்டிற்கு வந்துவிட்டேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.05.13 06:57:43 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.